பக்கங்கள்: ஆறு

யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 25 புதன்கிழமை (07-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 131

# மன்னார் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் புலிகள் அதிரடித் தாக்குதல்

## அதிகாரி உட்பட 3படையினர் பலி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ஜீப் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய ஒரு நிமிட நேர அதிரடித் தாக்குதலில் ஓர் அதிகாரி உட்பட மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஜீப் ஒன்று முற்றாக அழிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது.

இரவு 10.38 மணி அளவில் தள்ளாடி இராணுவ முகாமுக்கும் கோட்டைக்கும் இடையில் வைத்து இந்த அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து வந்த ஜீப் ஒன்றே தாக்குதலுக்கு உள்ளானது.

தள்ளாடியில் இருந்து புறப்பட்டு வந்த ஜீப் ரேகறுப்பிட்டி பட்டி காவலரணுக்கும், பெரிய பாலத்துக்கும் இடையில் வந்து கொண்டிருந்த போது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

தாக்குதல் நடத்தப்பட்ட ஒரு நிமிடத்தில் அதிகாரி உட்பட மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஜீப்பும் தலைகீழாக கடலுக்குள் விழ்ந்தது.

அந்த ஜீப் பின்னர் விடுதலைப் புலிகளால் முற்றாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில் 2 படையினர் பலி

யாழ்ப்பாணம், ஏப். 7

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 3 ஆம் திகதி விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் அதிரடித் தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

அன்று மாலை 3-30 மணி அளவில் மட்டக்களப்பு தாண்டாமலை இராணுவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மன்னாரில் ஊரடங்கு

கொழும்பு, ஏப். 7

மன்னார் மாவட்டத்தில், இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் நேற்றுக் காலை 6 மணி தொடக்கம் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது. (ஒ-எ)

## விமானத்தளங்கள், துறைமுகங்கள்; புலிகள் தாக்கலாம் என அச்சம்

### இந்தியாவில் பாதுகாப்பு தீவிரம்

புதுடில்லி, ஏப். 7

விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான கிட்டுவின் மரணத்துக்குப் பழி வாங்கு முகமாக இந்தியாவின் விமானத்தளங்கள், துறைமுகங்கள் ஆகியவற்றைத் தாக்குவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

இவ்வாறு இந்தியாவில் இருந்து வெளிவரும் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவுக்குள் புலிகள் ஊடுருவுவதைத் தடுப்பதற்

(5ஆம் பக்கம் பார்க்க)

### 1992 ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை:

## மொத்தப் புள்ளி விவரங்கள் இன்று அனுப்பி வைக்கப்படும்

### பல்கலைக் கழக அனுமதிக்கு 55, 126 பேர் தகுதி

கொழும்பு, ஏப். 7

1992 ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப் புள்ளி விவரங்கள், பரீட்சைத் திணைக்களத்தினால் இன்று பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

பாடசாலை மாணவர்களின் புள்ளிவிவரங்களை பாடசாலை அதிபர்கள் பெறுவார்கள்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அவர்கள் கொடுத்துள்ள விலாசத்துக்கு புள்ளிவிவரங்கள் அனுப்பி வைக்கப்படும்.

பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல இத்தகவல்களை வெளியிட்டார்.

இப்பரீட்சைக்குத் தோற்றிய ஒரு லட்சத்து 55 ஆயிரத்துக்கும் கூடுதலான பரீட்சார்த்திகளில் 55 ஆயிரத்து 126 பேர் பல்கலைக் கழக அனுமதியைப் பெறத் தகுதிபெற்றுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி வர்த்தகப்பிரிவில் முதலிடம்

### பொறியியலில் ஹாட்லி 3 ஆம் இடம்

கொழும்பு, ஏப். 7

1992 ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி செல்வி டானியல் தாரகா 340 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியாக முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இடம் 338 புள்ளிகளைப் பெற்ற விசாகா மகளிர் வித்தியால்ய மாணவன் என். எம். எஸ். தர்மரத்னாவுக்கு கிடைத்துள்ளது.

பொறியியல் துறையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவனான பி. தயாபரனும், கண்டி திரித்துவக் கல்லூரி மாணவனான ஆர். எம். ரத்னாயக்காவும் தலா 362 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளனர்.

அம்பலாங்கொடை தர்மா

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இன்றும் படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 7

இளவாலை—புங்குடுதீவு படகுச் சேவை இன்று புதன்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பங்களாதேஷில் கடும் பாதுகாப்பு

### பிரேமாவே முதலில் செல்கிறார்

டாக்கா, ஏப். 7

எதிர்வரும் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள சார்க் நாடுகளின் உச்சி மாநாட்டை முன்னிட்டு பங்களாதேஷில் என்றும் இல்லாதவாறு கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சார்க் அமைப்பின் தற்போதைய தலைவரான இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸாவே முதலாவதாக டாக்கா சென்றடையவுள்ளார் என்றும் —

'சார்க்' நாடுகளின் வெளிநாட்டுச் செயலர்களின் கூட்டம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (இ-த-6)

### அவ்ரோ நோட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 7

நேற்றுப் பிற்பகல் 3-30 மணியளவில் 'அவ்ரோ' விமானம் ஒன்று யாழ். நகரைச் சுற்றி நோட்டமிட்டு விட்டுச் சென்றது. [த-51-162]

### ஒரே நேரத்தில்

## மூன்று கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டன

மந்திகை, ஏப் 7

பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று நண்பகல் வரை குமாரி, குமண, நில்கிரி ஆகிய 3 கப்பல்களில் இருந்தும் ஒரே நேரத்தில் பொருள்கள் இறக்கப்பட்டன.

குமாரி கப்பல் பொருள்கள் இறக்கும் பணியை முடித்துக் கொண்டு நேற்று மாலையே திருகோணமலை நோக்கி புறப்பட்டது. இதில் 61 தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்பட்டன. மாவை ஏற்றிக் கொண்டு குமாரி கப்பல் திரும்பி வரும் என்று தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நின்ற நில்கிரி கப்பல் நேற்றுக்காலை பருத்தித்துறையை வந்தடைந்தது. 50பரல் மண்எண்ணெய்யை இறக்கி விட்டு அக்கப்பல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்-வன்னி தொடர்பு சேவை

நெருக்கடி கால யாழ்-வன்னி தொடர்புச்சேவை எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் போக்குவரத்துக் கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பான முழு விவரங்களும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தினசரிகளில் முழுமையாக வெளியாகும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

### சுதேச மருத்துவக்கல்லூரி:

## இன்று முதல் பல இடங்களில் மறியல் போராட்டங்கள்

சுதேச மருத்துவக் கல்லூரி மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பல இடங்களில் மறியல் போராட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சுதேச மருத்துவக் கல்லூரியின் கூரையின் மீது நடக்கும் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்வதாகவும்—

இதற்கு ஆதரவு தெரிவித்து இன்று கண்டியில் சுவரொட்டி போராட்டமும், மறியல் போராட்டமும் நடைபெற விருப்பதாகவும் — சங்கத்தின் தலைவர் அல்விஸ் தெரிவித்தார். (இ-3-6)

## நட்வர்சிங் உட்பட ஐவர் மீது இ. காங்கிரஸ் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஏப். 7

கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக முன்னாள் வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங் உட்பட ஐந்து முக்கிய தலைவர்கள் மீது இந்திரா காங்கிரஸ் தலைமைப் பீடம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்னோடியாக இந்த ஐந்து பேருக்கும், விளக்கம் கோரும் கடிதங்களை, காங்கிரஸ் கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜி.சீ.ஈ. பெறுபேறு மீள் பரிசிலனை

கொழும்பு, ஏப். 7 கடந்த வாரம் வெளியான ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பத்திரப் பரீட்சைப் பெறுபேறுகள் பற்றி மீள் பரிசீலனை செய்ய விரும்பும் பரீட்சார்த்திகள் இம் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-எ)

### கந்தர்மடம் மிருதங்க வித்துவான்

## திரு. எம்.என். செல்லத்துரை



ஈழத்தமிழர் இசைத்துறை வளர்ச்சியில் குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தைப் பின்நோக்கிப் பார்க்கிறேன்அந்தக் காலக் கலைஞர் தொகை மிகக் குறைவாக இருந்தாலும், இருந்தவர்களுக்குப் புகழ் நிறைவாக இருந்தது. உடுவில், என். ஷண்முகரத்தினம் எனப் பலராலும் மதிக்கப்பட்ட சங்கீத மேதை, சங்கீத பூஷணம் திரு. ந. ஷண்முகரத்தினம் அவர்கள் அவர்களிலே மிகவும் பாராட்டத்தக்க ஒருவர். புகழ் பரப்பி வாழ்ந்த சங்கீத பூஷணம் என்றால் அது மிகையாகாது.

இவரது கச்சேரிக்கு, பக்கவாத்தியம் வாசித்தால் வாசித்தவர்களுக்கும் மதிப்பொன்றிருந்தது. இந்த வரிசையிலே வயலின் வித்துவான் திரு. க. சித்திவிநாயகம் அவர்களும், கந்தர்மடம் செல்லத்துரை என அழைக்கப்பட்ட மிருதங்க வித்துவான் திரு. எம். என். செல்லத்துரை அவர்களும் குறிப்பிடத்தக்க வித்துவான்களாக விளங்கி வந்தனர். இதனால் அவர்களுக்கும் புகழோடு வித்துவத்துவமும் கூடவே இருந்தது. இதன் காரணமாக இடைப்பட்ட வித்துவான் பலரது பகைமையைநும் தேடிக் கொண்டார்கள். இப்படியான பகைமையுணர்வு இல்லாததும், பொல்லாததுமான வசைபுராணங்களையும் வளர்ந்துவிட்டன. இதன் காரணமாகத் தொழில் ரீதியான வசைபாடுகள் உருவாகி வந்தன. ஏன்றாலும் முழுப்பூசணிக் காயைச் சோற்றிலே புதைக்க முடியாது என்பதுபோல அவர்களது புகழ் மிகவும் உறுதியாக மேலோங்கி நின்றது.

திரு. செல்லத்துரை அவர்களுக்கு நன்மாணாக்கர் சிலர் தோன்றி மிருதங்க வாத்தியத்தினால் மதிப்பைப் பெற்றனர். திரு. செல்லத்துரை அவர்கள் தாளவாத்தியக் கருவிகளை மிக லாவகமாகவும், சிறப்பாகவும் இசைக்க வல்லவர். ''கொன்னக் கோல்'' சொல்ல வல்லவர். தெரிந்த கலைவல்லுநர்களையும், நண்பர்களையும் பின்பற்றி அங்கசேட்டைகள் செய்து காண்பிப்பதிலும் வல்லவர். அந்தக்காலத்துப் பாடசாலை நாடகங்களிலும். இரண்டொரு திரைப்படங்களிலும் தோன்றி நடித்த அனுபவத்தையும் பெற்றுள்ளார்.

தாளவாத்தியத்தில் ஒழுங்கான பாடாந்தர முறையில் தேர்ச்சி பெற்றவர் என்று அவரது பகைவர்கூடப் பாராட்டுவார்கள். இந்தியாவில் தங்கியிருந்த காலத்தில் பெரிய பெரிய வித்துவான்களுக்கு • அனுசரணையாகப் பக்கவாத்தியம் வாசித்து அவர்களது பாராட்டுக்களையும் பெற்றவர் இவர் மிருதங்க வித்துவர் நாகபட்டினம் திரு ரி.பி சொக்கலிங்க தேசிகர் அவர்களிடம் குருசிஷ்ய முறையில் தங்கியிருந்து பாடங்களைக் கற்றவர். ஆரம்பத்தில் பிரபல தவில்மேதை திரு. காமாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடம் கெஞ்சிரா வாத்தியத்தைக் கற்றுக் கொண்டார்.

யாழ். அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் ஆரம்பகால நிர்வாக உறுப்பினராக மட்டுமல்ல நீண்ட காலம் மிருதங்க ஆசிரியராகப் பணி புரிந்தவர், மன்றத்தின் நடன பாடசாலையின் மிருதங்க வித்துவானாகவும் இருந்து சிறப்புச் செய்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

இம்மன்றம் அன்னாரது சேவையை மதித்து வழங்கும் '' இசைப் பேரறிஞர் '' என்ற பட்டத்தைத் தவிர '' மிருதங்க மாமணி '' போன்ற விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் மேன் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து பணி செய்யப் பிரார்த்திக்கின்றோம்.

அ. நமசிவாயம்,
ச. பாலசிங்கம்,
யாழ். அண்ணாமலை,
இசைத் தமிழ் மன்றம்.

[25125]

## இன்று

சுவாமி சாந்தானந்தாவின் பிறந்த தின விழாவும், இராமகிருஷ்ணாலய நுண்கலைக் கல்லூரியின் 5ஆம் ஆண்டு நிறைவு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க)

o o o

மயிலணி சைவ மகா வித்தியாலய விவசாயப் பிரிவின் வருடாந்த விவசாய விழா இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது. விழாவின் பிரதம அதிதியாக விவசாய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு வி. மகேந்திரன் கலந்து கொள்கின்றார். கடந்த ஆண்டின் பல்வேறு விவசாயப் போட்டிகளின் பரிசளிப்புகளும் விழாவி இடம்பெறவுள்ளன. (க-89)

o o o

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்தப்படும் தையல் பயிற்சியின் திறப்பு விழா நிகழ்ச்சி இன்று நாயன்மார்கட்டு மாதர் கிராம அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறும்.

யாழ். பிரதி மாவட்ட ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் தையல் பயிற்சி நிலையத்தைத் திறந்து வைப்பார். (க)

o o o

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் சைவ சித்தாந்த ஆய்வுவட்டக் கருத்தரங்கு இன்று (புதன்) மாலை 4-30 மணிக்கு கலாமன்ற கேட்போர் கூடத்தில் நடைபெறும். ''ஈழத்தில் சைவசித்தாந்தம்'' என்னும் தொடருரையின் மூன்றாவது பகுதி உரையை பேராசிரியர் வண. நீ. மரியசேவியர் அடிகளார் நிகழ்த்துவார். (ஓ-51)

o o o

திருநெல்வேலியில் இயங்கும் பலாலி ஆசிரியர் கலாசாலை முதலாம் வருட ஆசிரிய மாணவர்களின் பீடங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டி இன்று புதன் பிற்பகல் 2.30 மணிக்கு கலாசாலை விளையாட்டரங்கில் நடைபெறும். [த]


A/L 95

CHEMISTRY-
திரு. மகாதேவா

ஆரம்பம்: 10-4-93

★ முன்கூட்டியே அனுமதியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் உங்கள் இடங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

BOND INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/4802)

N·C·A·
ஆத்தியடி, பருத்தித்துறை

A/L 95

கலை, வர்த்தகம்

10 — 04 — 1993
காலை 6 - 30

Eco. ஸ்ரீரங்கநாதன்
Acc. S.K. பிரபாகரன்
Com. R ரகுநாதன்
Log. [illegible]
H.C. ஜோதீஸ்வரன்
Tam. அமரசிவம்

(சி-4748)

நல்லூர் வீனஸ் கிரிக்கெற் கழக
நிதி உதவிக்காக
"யாழ்" ரமணனின்
"ராஜன்ஸ்"
இசைக்குழுவினர் வழங்கும்
"இதய கீதங்கள்"

காலம்: 22—4—93
(யாழ். இந்து குமாரசாமி மண்டபம்)
பி. ப. 4 மணி

ரிக்கற்றுக்களை சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகிலுள்ள "சவாரி" Fancey Goods இல் பெற்றுக் கொள்ளலாம். (சி-4801)

மலிவு விற்பனை

யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
இன்ரறக்ட் கழகம்

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு நடத்த இருக்கும்
ஐவுளி வகைகள்
அலங்காரப் பொருள்கள்
மலிவு விற்பனை

காலம் : 07-04-93 மாலை 2 மணி — 5 மணி வரை
08—04—93 காலை 9 மணி — 5 மணி வரை
இடம் : சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(25128) — சுண்டிக்குளி இன்ரறக்ட் கழகம் —

சிவாகி கல்வி நிறுவனம்
சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி.

A/L 95 கலை, வர்த்தகம்

ஆரம்பம்: 10·04·1993
சனி 8 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | க. கலாகரன் |
| கணக்கியல் | — | S. K. பிரபாகரன் |
| வர்த்தகம் | — | R ரகுநாதன் |
| இந்து நாகரிகம் | — | கமலநாதன் |
| அளவையியல் | — | A. பிரபாகரன் |
| புவியியல் | — | நித்தி |

★ எமது மாணவர்களின் சிறந்த பெறுபேறுகளே எமது உத்தரவாதம் என்பது அறிந்ததே.

(சி-4746)


தென்மராட்சி / பச்சிலைப்பள்ளி
தெ. ப. பொ. கூ. சங்கங்களின்,
கொத்தணி.

## பதவி வெற்றிடம்

வடிசாலை முகாமையாளர்:

சம்பளத் திட்டம் (வருடம்)

48,000 — 72,000
4 x 1800 — 7 x 2400

கல்வித் தகைமை:
இரசயானத்தை ஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞானமானிப் பட்டம் பெற்றவர், அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் 15 வருடங்கள் அனுபவம் பெற்றவர்.

வயதெல்லை: 45 வயதுக்குட்பட்டவர்.

குறிப்பு:
(அ) சம்பளத்துடன் கூட்டுறவு ஊழியர்களுக்கான சகல அலவன்ஸுகளும் வழங்கப்படும்.
(ஆ) கேட்கப்பட்ட கல்வித் தகைமைகள் இருந்தும் அனுபவம் இல்லாதிருப்பின் அல்லது கேட்கப்பட்ட அனுபவம் இருந்தும் கல்வித் தகைமை இல்லாதிருப்பினும் பொருத்தமான சம்பளத் திட்டத்தில் அமர்த்தப்படுவர்.
(இ) பொறுப்புகளுக்கு ஏற்ற வகையில் பிணைப் பணம் செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 'பொது முகாமையாளர்', தென்மராட்சி - பச்சிலைப்பள்ளி, தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, வரணி என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

முடிவு திகதி: 15 — 04 — 1993

பொதுமுகாமையாளர்,
தென்மராட்சி / பச்சிலைப்பள்ளி-
தெங்கு பனம் பொருள் கூ. சங்கங்களின்,
கொத்தணி, வரணி.

(சி 4892)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இளை நூலகம்
மாநகர ... 
யாழ்ப்பாணம்



# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி வீதி, யாழ். நகர்.

## ஆசிரியர் குழு - 95 (A/L)

✶ பௌதிகவியல்:
திரு. S. சோதிலிங்கம் B. Sc. (Special)
திரு. S. J. கணேசன் B. Sc (Eng.)

✶ இரசாயனவியல்:
திரு. K. சண்முகசுந்தரம் B.Sc (Hons,) Dip-in-Ed
திரு. M, சிவசுப்பிரமணியம் B.Sc. (Hons.)

✶ தாவரவியல்:
திரு. V. S. குணசீலன் B. Sc (Speciai)

✶ விலங்கியல்:
திரு. R. தம்பிராஜா B. Sc. Dip-in-Ed.
திரு. S. சிறீகரன் B. Sc. (Hons.)

★ தூய/பிரயோக கணிதம்:
திரு. P. வெக்டர் வேலாயுதம் B.Sc. (Hons )
திரு. S. குணசிங்கம் B Sc., Dip-in-Ed

நேர அட்டவணை
(சனி, ஞாயிறு தினங்கள் மட்டும்)

| பாடங்கள் | பிரிவு I | பிரிவு II |
|---|---|---|
| பௌதிகவியல் | 6 00 – 7-00 | 10 00–11 00 |
| தாவரவியல் | 7-00 – 8-00 | 11 00–12 00 |
| விலங்கியல் | 8 00 – 9 00 | 12-00 – 1 00 |
| இரசாயனவியல் | 9-00 –10-00 | 1 00 – 2 00 |
| தூய/பிரயோக கணிதம் | 7 00 – 9 00 | 11 00 – 1 00 |

**ஆரம்ப திகதி: 10 - 04 - 1993** (சனி)

குறிப்பு:
மேற்படி பிரிவுகளில் சேர விரும்புகின்ற அனைத்து மாணவர்களும் உங்கள் அனுமதிகளை உறுதிப் படுத்திக் கொள்வதற்காக 09-04-1993 (வெள்ளி)க்கு முன்னர் அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, அவற்றை உடனடியாகப் பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

— நிர்வாகி.

(சி-4738)

## கலந்துரையாடல்

யாழ் மாவட்டப் பாடசாலைகளில், ஆசிரிய கல்லூரிகளில் அல்லது கல்வித் திணைக்களத்தில் 26-06-90 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதில் கடமை புரிந்த அதிபர்கள், விரிவுரையாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும். (க)

## முஸ்லிம் ஆசிரியர் சுட்டுக் கொலை

ஓட்டமாவடி மத்திய வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியரான முகம்மது இஸ்மாயில் அப்துல் காதர் என்பவரை சைக்கிளில் வந்த ஆயுதபாணிகள் சுட்டுக் கொன்றுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

(ஓ-எ)

### 'A' LEVEL CENTRE

Point - Pedro Road,
Ist Lane, Jaffna.

A/L 95ஆம் ஆண்டுக்கான கணித / விஞ்ஞான பாடங்களுக்குமான வகுப்புக்கள் ஆரம்பம்.

வழமையான ஆசிரியர் குழு

ஆரம்பம்;
10–04–1993 Sat. 6 15

குறிப்பு:
ஒவ்வொரு வருடமும் சகல பாடங்களில் பாடப் பரப்புகள் சிறப்பாகவும் குறித்த கால எல்லைக்கு முன்கூட்டியும் எந்த ஒரு சூழ் நிலையிலும் நிறைவு செய்யப்பட்டு சிறந்த பெறுபேறுகளைப் பெற்று, மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றது எமது நிறுவனம்.

(சி-4884)

லொறியில் வெடிமருந்து கொண்டுவந்த

## தமிழ் சகோதரர் இருவர் கொழும்பு நகரில் கைதாம்

கொழும்பு, ஏப். 7

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு லொறி ஒன்றினுள் வெடிமருந்துகளை ஏற்றிக் கொண்டு வந்ததாகக் கூறப்படும் ரகுநாதன் புலேந்திரன், ரகுநாதன் ரவீந்திரன் ஆகிய சகோதரர்களை நீர் கொழும்புப் பொலீஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்கள் இருவரும் கொழும்பு, ஆமர் வீதியில் உள்ள விடுதி ஒன்றில் நித்திரையில் இருந்த சமயம் கைது செய்யப்பட்டார்கள்.

வெங்காய வியாபாரிகள் போல் நடித்தே இருவரும் பாதுகாப்புப் படையினரின் சோதனை நிலையங்கள் ஊடாகத் தப்பி வந்தனர் என்று கூறப்படுகிறது,

கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளன.

(ஓ-எ)

## கணக்காளர் பதவி வெற்றிடம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கணக்காளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் தகுதிகளில் ஏதாவது ஒன்றைப் பெற்றிருப்பவர்கள், 21 - 04 - 93க்குமுன் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். பொருத்தமான ஊதியம் வழங்கப்படும்.

தகுதிகள்:

1. கணக்கியல் டிப்ளோமா,
2. வர்த்தகமாணிப் பட்டப்படிப்பு.
(மேற்படி கல்வித் தகுதிகளுடன் குறைந்தது 2 வருட அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது)
3. ஓய்வு பெற்ற அரச கணக்காளர்
4. ஓய்வு பெற்ற அரச கணக்காய்வாளர்

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
83/2, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

செயலாளர்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்.

(சி/4893)

ஆனைக்கோட்டை

## அருள் மிகு கரைப்பிரான் ஆதிவிநாயகர் தேவஸ்தானம்

# பிரம்மோற்ஸவ விஞ்ஞாபனம்

| | | | | |
|---|---|---|---|---|
| கொடியேற்றம் | 07 — 04 — 1993 | இன்று | காலை | 10-00 மணி |
| சப்பரம் | 19 — 04 — 1993 | திங்கள் | இரவு | 7-00 மணி |
| தேர் | 20 — 04 — 1993 | செவ்வாய் | காலை | 10-00 மணி |
| தீர்த்தம் | 21 — 04 — 1993 | புதன் | காலை | 10-00 மணி |

07 — 04 — 1993 தொடக்கம் 21 — 04 — 1993 வரையுள்ள பதினைந்து தினங்களும் ஈழத்தில் புகழ் பெற்ற அந்தணப் பெருந்தகைகளும் மற்றும் அறிஞர் பலரும் சமயச் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

நேரம் தினமும் 4-30 முதல் 5-30 வரை

22 — 04 — 1993 வியாழன் மாலை -00 மணியளவில் வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமானுக்கு ''திருக் கல்யாண வைபவமும்'' நடைபெற திருவருள் கிடைக்கப் பெற்றோம்.

எனவே அன்பர்கள், அடியார்கள் யாவரும் மேற்படி காலங்களில் வருகை புரிந்து ஆனை முகத்தானை தொழுது பேரருள் பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

சோம. சிவகுமார சர்மா,
ஆதீன அர்ச்சகர்.

(25106)

# BEACON STUDY CENTRE

(வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி முன்பாக)
வதிரி, கரவெட்டி.

## 1995 (A/L) பிரிவுக்கான

ஆசிரியர் குழு:

விஞ்ஞானம்
தூய/பிரயோக கணிதம் — திரு. நல்லையா
பௌதிகவியல் — திரு வர்ணம்
இரசாயனவியல் — திரு. தில்லைநாதன்
— திரு. சண்முகசுந்தரம்
தாவரவியல் — திரு. குணசீலன்
விலங்கியல் — திரு தம்பிராசா

கலை / வர்த்தகம்
பொருளியல் — திரு. கலாகரன்
கணக்கியல் — திரு S K பிரபாகரன்
வர்த்தகம் — திரு ரகுநாதன்
அளவையியல் திரு A பிரபாகரன்
தமிழ் — திரு நடராசா
இந்து நாகரிகம் — திரு ஜோதீஸ்வரன்

**ஆரம்பம்: 10-04-1993**
சனி பிற்பகல் 3 00

(சி-4743)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

பிரிவுIII

## O/L DAY CLASSES (8-00 - 2-00)

ஆரம்பம்: 08 — 04 — 93 8மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்
★ வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும்
★ கணிதம், விஞ்ஞானம் வாரத்தில் 6மணித்தியாலம் நடைபெறும்
★ இவ்வருடம் 5 பிரிவுகள் மட்டுமே ஆரம்பமாகும்.

(சி/1886)

கலை, வர்த்தகக் கல்லூரி

# C. C. A.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

O/L DAY CLASS — புதிய பிரிவு

எமது ஆசிரியர் குழு;

விஞ்ஞானம் — திரு இரா செல்வவடிவேல்
கணிதம் — திரு. அரு செல்வம்
சமூகக்கல்வி — திரு கணேஸ்
வர்த்தகம் — திரு விக்கி
தமிழ், சமயம் — திரு. கோப்பாய் சிவம்
ஆங்கிலம் — திரு ஜெயா

ஆரம்பம்: 08 — 04 — 1993

— நிர்வாகி

(சி-4732)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒலிவேற்றி (சிறியரகம்) புதிய தட்டச்சு, இயந்திரங்கள் (ஆங்கிலம்) விற்பனைக்கு உண்டு. 12 மாத காலம் விற்பனைக்கு பிந்திய சேவை இலவசமும், ஒருவருட கால உத்தரவாதமும் வழங்கப்படும். எமது விற்பனை நிலையத்தில் நேரில் பார்வையிடலாம். கனக்சி புகைப்பட சேவை, 337/1, 1ஆவது மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[சி-4741]

### லவ்பேர்ட்ஸ் விற்பனைக்கு

லவ்பேர்ட்ஸ் குருவிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆறுமுகம் கூல்பார், நவீன சந்தை சாவகச்சேரி.
(சி-4888)

### மணப்பெண் தேவை

32 வயது, உயரம் 5 அடி 2 அங்., உத்தராடம், உதயச் செவ்வாய் மணமகனுக்கு மணப்பெண் தேவை. வெளிநாடு செல்ல விரும்புகிறார். விதவைளும், விவாகரத்தானோரும் சாதகத்துடன் 15 - 04 - 1993 க்குள் விண்ணப்பிக்கவும். மங்களா ஏஜென்ஸி, கொய்யாத்தோட்டம்.
(25107)

### மணமகள் தேவை

இந்து, வயது 34, ஆயிலியம் 1ஆம் பாதம், லக்கினத்தில் செவ்வாயுள்ள, A/L படித்த மத்திய கிழக்கு நாடொன்றிலிருந்து திரும்பவுள்ளவருக்கு மணமகள் தேவை. திருமணம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும். ஆசிரியையாயின் முன்னுரிமை வழங்கப்படும். சீதனம் பெற்றோரின் விருப்பம். முழு விவரங்களுடனும், சாதகக் குறிப்புடனும் தொடர்புகொள்ளவும்: இலக்கம் 896, மே/பா உதயன்.
(6094)

### இலவச திருமண சேவை

27 வயது, அச்சுவினி, செவ்வாய் 2, கனடாவில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில் அல்லது அழைக்கப்படும். மணமக்கள் உண்டு. தொடர்பு ஞாயிறு காலையில். விமலா, யாழ் / நாச்சிமார் கோவிலடி,
(25112)

### இந்து சமயம்

கடந்த கால வினாத்தாள்களின் தொகுப்பு விலை ரூபா 24/-. தொகுப்பு சொற்பமே சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (25105)

---

# கீன் கல்வி நிலையம்

திருநெல்வேலி.

## AL 95 கலை வர்த்தக வகுப்புகள்

ஆரம்பம்: 10 - 04 - 1993

காலை 8 - 00 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. வரதராஜன் |
| அளவையியல் | — | திரு. S. S. மனோகரன் |
| கணக்கியல் | — | திரு சௌந்தி |
| வர்த்தகவியல் | — | திரு. வரதன் |
| தமிழ் | — | திரு. கணேசன் |
| இந்துநாகரிகம் | — | திரு. சிவமகாலிங்கம் |
| புவியியல் | — | பிரபல ஆசிரியர்கள் |

★ அனுமதி வரையறுக்கப்பட்டுள்ளதால், அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி-4890)

---

# கலை, வர்த்தகக் கல்லூரி

C. C, A.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

## A/L - 95

புதிய பிரிவு I

எமது ஆசிரியர்குழு:

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| கணக்கியல் | — | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | — | திரு இரட்ணம் |
| அளவையியல் | — | திரு. சயந்தன் |
| இந்துநாகரிகம் | — | திரு. ஜோதீஸ்வரன் |
| புவியியல் | — | திரு. வேலா |
| தமிழ் | — | திரு. தங்கராஜா |
| அரசியல் | — | திரு. பஞ்சு |

ஆரம்பம்! 10 - 04 - 1993 [காலை 8-00மணி

குறிப்பு: மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது. ஆகவே முன்கூட்டியே பதிவு செய்து இடத்தை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

-நிர்வாகி

(சி/4734)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

## 95 கலை, வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம்: 10-04-93 10 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. S. K. பிரபாகரன் |
| அளவையியல் | — | திரு. விக்கி |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்துநாகரிகம், இந்துசமயம் | — | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராஜா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறீதரன் |

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டதால் 200 மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்

(சி/4881)

---

# கீன் கல்வி நிலையம்

திருநெல்வேலி.

## O/L DAY CLASS

ஆரம்பம்:

08—04—1993 8 மணி

விஞ்ஞானம்— இரா. செல்வவடிவேல்
கணிதம்— கருணாகரன்
தமிழ் — புலவர் சிவா
சமூகக்கல்வி— நித்தி
ஆங்கிலம் — சபா
வர்த்தகம் — ஸ்ரீ

★ வகுப்புகள் வாரத்தில் நான்கு நாட்களும் நடைபெறும்

(சி-4889)

---

# O/L DAY CLASS பகல் நேர வகுப்பு

## ஏப்ரல் - 10இல் ஆரம்பமாகிறது

முன் கூட்டியே பெயர்களைப் பதிந்து உங்கள் இடங்களை உறுதி செய்து கொள்ளுங்கள்.

20 வருட இணையற்ற சேவையில் உயர்ந்து விளங்கும் நிறுவனம்

ESTD:-1973 REGD:- № J/7993

**The Express Institute**

IRUPALAI - KOPAY

(25123)

---

# சேவைநலன் பாராட்டு விழா

திரு. பொன். தெய்வேந்திரன் SLEAS -II
(முன்னாள் உப அதிபர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய்)


அவர்களின் நீண்டகால சேவையைப் பாராட்டும் பொருட்டு கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் சேவைநலன் பாராட்டு விழா 08-04-93 அன்று நடைபெறுகிறது. அதிபர், உப அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் அனைவரும் திரு. பொன். தெய்வேந்திரன் அவர்களுக்குத் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

அதிபர், உபஅதிபர்,
விரிவுரையாளர்கள்,
ஆசிரிய மாணவர்கள்.

(6098)

---

# 1ஆம் ஆண்டு நிறை' நாள் நினைவுகள்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 14 | 19 |
| 07 | 03 |
| 1935 | 1992 |

## அமரர் அப்பையா மகாதேவன்

திதி: 07—04—1993

எம் இதயம் உள்ளவரை உங்கள் நினைவு மறையாதையா.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்.

நெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.

(25124)

---

# 2ஆவது ஆண்டு நினைவு தினம்

"நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்." சங். 23:6 (B)



தோற்றம்: 18 — 09 — 1912

மறைவு: 07 — 04 — 1991

## யோசேப் பெஞ்சமின்

அன்னாரின் வாழ்க்கைக்கு நன்றி செலுத்தும் ஆராதனை பரி. யோவான் ஆலயத்தில் இன்று 07-04-1993 காலை 7-00மணிக்கு நடைபெறும்.

உங்களை யேசுவின் நாமத்தில் அன்புடன் அழைக்கிறோம்.

"இறை ஆசி நம் அனைவரோடும் இருப்பதாக"

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

52, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி.

(6087)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஆஸ்திரேலியாவின் அக்கறை

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுக்களில் உதவுவதற்கு சர்வதேச அவதானிகள் குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

அவ்வாறு செய்வதற்கு ஐ. நா. அமைப்பின் ஏஜென்சிகள் மூலம் அல்லது பொதுநலவாய அமைப்பின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்விடயத்தில் முன்முயற்சி எடுத்துவரும் கனடாவுடன் இணைந்து செயற்பட ஆஸ்திரேலிய அரசும் முன்வரவேண்டும்.

இவ்வாறு ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் வெளிவிவகார, பாதுகாப்பு மற்றும் வர்த்தகக் கூட்டுக்குழு தனது பிந்திய அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் நீண்ட நாள் விவகாரமான தமிழர் பிரச்சினையை ஸ்ரீலங்கா அரசாங்கம் நியாயமாக, தமிழர்களின் பாதிப்புகள் நிவர்த்தி செய்யப்படும் வகையில் தீர்த்துவைக்கப்போவதில்லை. தமிழர்களின் உரிமைகளை நிலைநிறுத்தும் வகையில் தீர்த்து வைக்கும் எண்ணமும் அதற்கு இல்லை.

தமிழர்களின் பிறப்புரிமைகளை, வாழ்வுரிமைகளை நசுக்கும் விதத்தில் ஒரு தீர்வைத் திணிப்பதிலேயே அரசு கண்ணாயிருக்கிறது.

ஆனால் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் தனக்கு அக்கறை இருப்பதாகக் காட்டிக் கொள்வதற்கு தெரிவுக்குழு போன்ற சில தந்திரங்களையும் கையாள்கிறது. தமிழர் விவகாரத்தில் வெளி உலகமோ அல்லது ஐ. நா. போன்ற சர்வதேச விவகார அமைப்புகளோ தலையிட்டு விடாமல் தடுப்பதற்கான காப்பரண்களே தெரிவுக்குழு போன்ற ஏற்பாடுகள்!

ஆனால் ஸ்ரீலங்கா அரசின் தொடர்ச்சியான இந்த ஆசாடபூதித்தனத்தை சர்வதேச நாடுகள் இன்னும் இனங்கண்டதாக இல்லை. தமிழர்களின் வாழ்வுரிமைகளைப் பறித்து அவர்களை அழித்துவிடும் ஸ்ரீலங்காவின் நடவடிக்கைகளை கண்டு கொள்ளாதவையாக, அரசின் பொய்ப் பிரசாரத்தில் ஏமாந்தவையாக அவை செயற்படுகின்றன.

கனடா, ஆஸ்திரேலியா மற்றும் ஸ்கன்டினேவியன் நாடுகள் தமிழர் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று குரல் கொடுத்தாலும், சில முன்முயற்சிகளில் ஈடுபட்டாலும் பயன்தரவல்ல ஆக்கபூர்வமான செயற்பாடுகளைக் காணோம். ஸ்ரீலங்கா அரசு இனப்பிரச்சினையை நியாயமான, நீதியான முறையில் தீர்க்கப்போவதில்லை என்பதனையும் அதன் தந்திரமான அணுகுமுறைகளையும் இந்த நாடுகளே ஓரளவிலேனும் புரிந்து கொண்டுள்ளன.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றக்குழு வெளியிட்டிருக்கும் அறிக்கை தமிழர் பிரச்சினையை நீதியாகத் தீர்த்து வைக்க வேண்டும் என்பதில் ஆஸ்திரேலிய மக்களுக்கு எவ்வளவு அக்கறையும் ஆர்வமும் உள்ளன என்பதை வெகு துலக்கமாகப் பிரதிபலிக்கிறது.

பேச்சுக்களுக்கு உதவ சர்வதேச அவதானிகள் குழுவை அமைப்பது மட்டுமன்றி, வடக்கின் நிலைவரத்தைக் கண்காணிப்பது, மனிதாபிமான உதவிகளைப் பங்கிடு செய்வதை மேற்பார்வை செய்வது, ஸ்ரீலங்கா மீது பூரண ஆயுதத் தடை விதிப்பது ஆகியனவும் ஆஸ்திரேலிய அறிக்கையின் கனதியான அணுகுமுறையின் அம்சங்களாகும். இவற்றைச் செயற்படுத்துவதில் ஆஸ்திரேலியாவும், கனடாவும் முழுமூச்சாக ஈடுபட்டால் நற்பயன் விளையும் என்று நம்பலாம்.

# தமிழ் இசை விழா இன்று நல்லூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 35ஆவது ஆண்டு தமிழ் இசை விழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகி, தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

நல்லூர் பண்டாரக்குளம் மருதர்வளவு விநாயகர் ஆலய முன்றலில் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இன்றைய நிகழ்ச்சிகள் இரவு 7 மணிக்கு திரு. நாகேஸ்வரன், திரு. கணேசமூர்த்தி கோஷ்டியினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ கு. குமாரக்குருக்கள் ஆகியோரின் ஆசியுரைகளும் அதையடுத்து மிருதங்கமணி திரு எம். என். செல்லத்துரைக்கு "இசையரசு" பட்டம் வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கும் நிகழ்ச்சியும் இடம்பெறும். தொடர்ந்து சங்கீதபூஷணம் திரு. சு. கணபதிப்பிள்ளையின் இசைநிகழ்ச்சி இடம்பெறும்.

இன்றைய விழாவில் சிறப்பு விருந்தினராக விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரையும், கௌரவ விருந்தினர்களாக பேராசிரியர் எஸ் சிவஞானசுந்தரம், நல்லூர் உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (ஓ-111)

## ஆலயங்களில்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் — பத்தாம் திருவிழாவான இன்று புதன்கிழமை — மஞ்சத் திருவிழா இடம்பெறும். மாலை 6 மணிக்கு விநாயகப் பெருமான் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தில் திருவீதியுலா வருவார்.

இன்று பகல் அன்னதான நிகழ்ச்சியும் நடைபெறும். (ஓ)

o o o

மேலைப் புலோலி, வாணர் குடியிருப்பு சொக்கன் கலட்டி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று புதன் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். (க-87)

o o o

பொலிகண்டி கந்தவனக் கடவை முருகன் ஆலயத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட மகாவல்லி, கஜாவல்லி சமேத அருள்தரு ஸ்ரீகார்த்திகேயப் பெருமானுக்கு இன்று புதன் காலை 8-45 மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறும். [க 87]

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 7

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் நாவாந்துறை கலைவாணி மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ அளவெட்டி விநாயகர் வி. க. எதிர் சுன்னாகம் கணேசன் வி. க.

★ சென். லூட்ஸ் தொடர் மாடி வி. க. எதிர் திருநகர் பாரதி வி. க. (த)

o o o

சுன்னாகம் ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நாளை இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ காங்கேசன் யங்றோயல் அணி எதிர் அராலி சில்வஸ்ரார் அணி.

★ ஊரெழு றோயல் அணி எதிர் மல்லாகம் கி. மு. ச. அணி. [த]

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 7

"உதயன்" நிறுவனத்தின் ஆதரவில் யாழ். செயலகம் நடத்திவரும் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று மாலை யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறும்.

இன்று பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறும் பெண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து யுத்காமல் அணி மோதும்.

ஆண்களுக்கான இறுதியாட்டம் மாலை 4-30 மணிக்கு ஆரம்பமாகும். ஷப்றா அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதும். [உ]

o o o

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் டொனால்ட் கணேஷகுமார் ஞாபார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் ஐம்பது ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்குபற்றும் அணிகளின் ஒழுங்கு பற்றிய தெரிவு இன்று மாலை 4-00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். [உ]

## பழனி ராணிப்பேட்டை தேர்தல்கள்

புதுடில்லி, ஏப். 7

தமிழ்நாட்டில் பழனி நாடாளுமன்றத் தொகுதியிலும் ராணிப்பேட்டை சட்டசபைத் தொகுதியிலும் அடுத்த மாதம் 19 ஆம் திகதி இடைத் தேர்தல் நடத்தப்படும்.

புதுடில்லியில் தலைமைத் தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும் கடைசித் திகதி இம்மாதம் 26 ஆம் திகதி என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அ. தி. மு. க. —இந்திரா காங்கிரஸ் கூட்டணி முறிவுற்ற நிலையில் இந்த இரு இடைத்தேர்தல்களும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (இ-எ)

## தமிழ் வர்த்தகர் கொலை

கொழும்பு, கொட்டாஞ்சேனைப் பகுதியைச் சேர்ந்த பிரபல தமிழ் வர்த்தகர் ஒருவர் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் என்றும்—

அவரது சடலம் வெள்ளவத்தைக் கடற்கரையில் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டது என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (ஓ-எ)

## சிமெந்து ஊழியர் திண்டாட்டம்

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவன தொழிலாளர்களின் 3 மாதச் சம்பளம் மற்றும் பண்டிகை முற்பணம் ஆகியவை இங்கு வந்துள்ள போதும், அந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியாது அவர்கள் திண்டாடுகின்றனர் என்றும்—

உரிய அதிகாரி இங்கு தற்சமயம் இல்லாததால்தான் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்றும் கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குற்றஞ்சாட்டி உள்ளது. (ஓ)

# உலக சுகாதார தினம்

யாழ்ப்பாணம், ஏப். 7

உலக சுகாதார தினம் இன்றாகும்.

உலக சுகாதார தினத்தை ஒட்டி யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மனித உயிர்கள் பாதுகாக்கப்படல் வேண்டும்", கவனயீனத்தையும், காயங்கள் ஏற்படுவதையும் தடுக்க வேண்டும்" என்பவையே இந்த வருடத்திற்கான உலக சுகாதார நிறுவனத்தின் வேண்டுகோள் ஆகும்.

உலகில் ஒவ்வொரு வருடமும் 35 லட்சம் பேர் — குறிப்பாக இளைஞர் யுவதிகள் — விபத்து, தற்கொலை, நஞ்சூட்டல், ஆயுதங்களால் ஏற்படும் காயங்கள் போன்றவற்றால் இறக்கின்றனர். அல்லது அங்கவீனர்கள் ஆகின்றனர்.

ஆகவே இவற்றைக் குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளுக்கு சகல நாடுகளும் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-த)

### விமானத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காக சம்பந்தப்பட்ட சகல இடங்களிலும் பாதுகாப்புத் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஆனால் இப்பத்திரிகைச் செய்தி குறித்து இந்திய அரசு எதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை என வெரித்தாஸ் வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது (இ-6)

# நடிகை திவ்வியபாரதி மாடியால் விழுந்து மரணம்

பம்பாய், ஏப். 7

பிரபல இந்திய சினிமா நடிகை திவ்வியபாரதி பம்பாயிலுள்ள ஆறுமாடிக் கட்டடம் ஒன்றில் இருந்து விழுந்து மரணமானார்.

நண்பர்களுடன் விருந்து ஒன்றில் கலந்துகொண்ட அவர் குடிவெறியில் அக்கட்டடத்தின் திறந்த ஜன்னல் ஒன்றின் ஊடாக நடந்து சென்றதால் அங்கிருந்து விழுந்து மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
சாரணர் குழுவின்
75ஆவது ஆண்டு நிறைவு விழாவும்
மலர் வெளியீடும்

தலைவர் : செல்வன் மு. ஜோதீஸ்வரன்
பிரதம விருந்தினர் :
திரு. க. குகபாலன்
(சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்)
இடம் : குமாரசாமி மண்டபம்
காலம் : இன்று பிற்பகல் 2-00 மணி

சிறப்பு நிகழ்ச்சியாக
தமிழீழத்தின் பிரபல்யம் வாய்ந்த
இசைக்கலைஞர்கள் வழங்கும்
★ இன்னிசை கானம் ★
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
சாரணர் குழு
(25136)



யாழ்ப்பாணம் அண்ணாமலை
இசைத்தமிழ் மன்றத்தின்
35 ஆவது ஆண்டு
தமிழ் இசை விழா

இடம்: பண்டாரக் குளம் மருதவளவு விநாயகர் ஆலய முன்றல்

நிகழ்ச்சி நிரல்
7-4-93 புதன்கிழமை

மாலை 7·00 மணி
மங்கள இசையுடன் ஆசியுரைகளுடன் வரவேற்புரையுடன்
மிருதங்கமணி M N செல்லத்துறை அவர்கட்கு
"இசையரசு" பட்டம் வழங்கி,
பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்

கௌரவ விருந்தினர்கள்:
வைத்திய கலாநிதி பேராசிரியர் S சிவஞாசுந்தரம் (நந்தி)
திரு ஆ மகாலிங்கம் உதவி அரச அதிபர், நல்லூர்
முத்த இசைக் கலைஞர்களின் பாராட்டுரைகளையடுத்து
தலைமையுரை M,N செல்லத்துரை

இசை அரங்கம்
மாலை 9·00 — 10·00
திரு, சு. கணபதிப்பிள்ளை — பாட்டு
திரு. R.S. கேசவமூர்த்தி — வயலின்
இசையரசு திரு M N செல்லத்துரை — மிருதங்கம்
செல்வன் ச நாகராசா — கெஞ்சிரா

வாழ்த்துவோர்: திருப்பதி ஸ்ரோர்ஸ்
யாழ்ப்பாணம். (25131)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### சிவானந்தம்பிள்ளை மனோன்மணி

வேலணை கிழக்கு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இல. 93 கண்டிவீதி, கச்சேரியடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான சிவானந்தம்பிள்ளை மனோன்மணி 5-4-93 இல் காலமானார்.

அன்னார் காலம்சென்ற சிவானந்தம்பிள்ளையின் அன்பு மனைவியும், இராசலெட்சுமி, மகாலெட்சுமி, அருந்தவராசா (பிரான்ஸ்), ஜெயலெட்சுமி, சிவானந்தராசா ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். இறுதிக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சித்திப்பாத்தி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. சிறிதரன் (தர.)
(பேரன்)

கச்சேரியடி,
சுண்டுக்குளி.

(25133)

### சதாசிவம் சங்கரப்பிள்ளை பரமலிங்கம்

சதாசிவம் சங்கரப்பிள்ளை பரமலிங்கம் காலமானார்.

அன்னார் காரைநகர் களபூமி கரப்பிட்டியந்தனையை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது கொழும்பில் வசித்தவரும் S. M. சவரி அன் சன்ஸ் (கொழும்பு) பங்காளரும், சங்கரப்பிள்ளை தெய்வானையின் அன்பு புதல்வரும், சுந்தரம்பாளின் அன்புக் கணவரும், சிவமணி, அமிர்தலிங்கம், தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், லோகேஸ்வரியின் அன்புமாமனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் கொழும்பில் 06-04-93 செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
S. தர்மலிங்கம்

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

[25130]

### ஆறுமுகம் நேசம்மா

காரைநகர் மாப்பாணவூரியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் ஆசைப்பிள்ளை ஆறுமுகத்தின் அன்பு மனைவி நேசம்மா கொழும்பில் காலமானார்.

இவர் புவனேஸ்வரி, சகுந்தலாதேவி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற யோகேஸ்வரி, தவராஜா (I.P.T), தேவராஜா (I P.T) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, சபாநேசன், பாலசுப்பிரமணியம், சாந்தினி, சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
க. அனுசூயா (பேர்த்தி)
(ஆசிரியை, தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்)

க. சிவபாதம்,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

[25135]

## நட்வர்சிங் உட்பட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
குழுவின் உபதலைவர் பல்ராம் ஜாக்கர் நேற்று தனித்தனியாக அனுப்பி வைத்தார்.

ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கும் ஏனைய நான்கு காங்கிரஸ் தலைவர்களும் திருமதி ஷீலா டிக்ஷிட், திரு எம். எல். பொட்டேடார், கே. என். சிங், சிந்தா மோஹன் ஆவர்,

(இ எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அப்பாத்துரை கண்ணம்மா

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கற்தையா சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளான கண்ணம்மா கொழும்பு 11, 160 செட்டியார் தெரு, இல்லத்தில் ஞாயிறு அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற அப்பாத்துரையின் அன்பு மனைவியும், காஞ்சனாவின் (சட்ட மா திணைக்களம்) அன்புத் தயாரும், ரவீந்திரனின் மாமியாரும், புவிகாசன், தாரணி, தர்சன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இராஜம், கதிராசி, அன்னம்மா, வள்ளியம்மை மற்றும் நல்லம்மா, திலகவதி, ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், நடராசா, குணசிங்கம் மற்றும் நாகரட்ணம், மாரிமுத்து, கனகலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இவரது ஈமக்கிரியைகள் 05-04-1993 கொழும்பில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினருக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி திலகவதி கனகலிங்கம்
திருமதி சாந்தா சற்குணநாதன்

சங்கத்தானை,
சாவகச்சேரி.

(25134)

### திருமதி திலகவதி நாகலிங்கம்

திருமதி திலகவதி நாகலிங்கம் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் ஓய்வுபெற்ற தபால் அதிபர் அவர்களின் அன்பு மனைவியும், செல்லவதி, காலஞ்சென்ற அருணாசலம்பிள்ளை (தபால் அதிபர்), விவேகானந்தன் (முகாமையாளர் இலங்கை வங்கி, காங்கேசன்துறை), சர்வேஸ்வரி, இராமநாதன் (அமெரிக்கா), பரமேஸ்வரி (ஆசிரியை முள்ளியவளை, மகாவித்தியாலயம்), சண்முகநாதன் (விலைமதிப்பு திணைக்களம், கொழும்பு), கனகாம்பிகை ஆகியோரின் அருமைத் தாயாரும், டாக்டர் அப்பாத்துரை, காலஞ்சென்ற சரஸ்வதியம்மா, நித்தியமங்களாதேவி, சுப்பிரமணியம் (கணக்காளர்), சரோஷனி (அமெரிக்கா), டாக்டர் இராசதுரை (முள்ளியவளை), ஜெயலட்சுமி (நடன ஆசிரியை, கொழும்பு) ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்;
நா. விவேகானந்தன்.

சித்தன்கேணி.

(6099)


தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். (யோவே 2:21)

......அப்பொழுது பிணியாளிகளைக் குணமாக்கத்தக்கதாகக் கர்த்தருடைய வல்லமை விளங்கிற்று. (லூக். 5:17)

சகலருக்கும் ஓர் நற்செய்தி!

பாவம், பயம், நோய், புகைத்தல், பேய். பில்லிசூனியம், மதுபானம், பிரச்சினைகள், கெட்ட பழக்கங்களிலிருந்து

"இயேசு கிறிஸ்து"வின் மூலம் விடுதலை

ஈஸ்டர் சுவிசேஷமும்

தெய்வீக சுகமளிக்கும் ஆராதனைகளும்

காலம்: 1993 ஏப்ரல் 8 முதல் 11 வரை

நேரம்: தினமும் மாலை 4.00 மணிக்கு

இடம்: இலங்கை பெந்தெகொஸ்தே சபை,
111, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

ஏனைய கூட்டங்கள் : காலை 7.00 மணிக்கு — வேதபாடம்
காலை 9-00 மணிக்கு — ஆராதனை
இரவு 9-00 மணிக்கு — காத்திருப்புக் கூட்டம்

★ இலவச உட்பிரவேசம்.

★ யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ காணிக்கை சேர்க்கப்படமாட்டாது.

நாட்கள் பொல்லாதவைகளானதால்
காலத்தைப் பிரயோசனப்படுத்திக்கொள்ளுங்கள். (எபே. 5:16)

(25129)


## திரிபுராவில் கம்யூனிஸ்ட் வெற்றி

இந்தியாவின் திரிபுரா மாநில சட்டசபைக்கு நடந்த தேர்தலில் மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சி அறுதிப் பெரும்பான்மையை பெற்றுள்ளது.

ஐந்து ஆண்டு கால இடைவெளியின் பின்னர் மீண்டும் மாநில ஆட்சியை மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சி கைப்பற்றி உள்ளது.

தேர்தல் முடிவுகள் வெளியான 42 ஆசனங்களில் 32 ஆசனங்கள் மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சிக்குக் கிடைத்துள்ளது. மொத்த ஆசனங்களின் தொகை 60 ஆகும்.

### மூன்று..,

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)
கொழும்பு திரும்பிச் சென்றது.

கடந்த வெள்ளிக்கிழமை 1,750 பரல் மண்ணெண்ணையுடன் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த மேற்படி கப்பல் ஆயிரத்து 700 பரல்களை மட்டுமே அங்கு இறக்கிவிட்டு காங்கேசன் துறைமுகம் சென்றிருந்தது.

தற்போது மீண்டும் பருத்தித்துறைக்கு வந்து மிகுதி 50 பரல் மண்ணெண்ணெயையும் இறக்கிவிட்டுச் சென்றுள்ளது.

குமணவில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் நேற்றும் இடம்பெற்றன.

(இ-த-87-17)

### மன்னார்...

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)
அழிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் இராணுவத்தினரிடம் இருந்து இரண்டு ரி 56 ரக துப்பாக்கிகள், ஒரு ஜி 3 ஏ 3 ரக துப்பாக்கி, 60 நடுத்தர ரவைகள். 19 நேட்டோ ரவைகள், இரண்டு ரி 56 ரக ரவைகூடுகள், ஒரு ஜி 3 ஏ 3 ரக ரவைக்கூடு, ஒரு தொலைத் தொடர்பு சாதனம், ஒரு சோடி சப்பாத்துக்கள் ஆகியவை புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

இந்த ஆண்டில் மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய மூன்றாவது தாக்குல் இதுவாகும்.

(இ-எ-3)

### மட்டக்களப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
முகாமில் இருந்து ரெட்பானா வீட்டுத் திட்டத்தை நோக்கி வந்த இராணுவத்தினர் மீது விடுதலை புலிகள் இத் திடீர் தாக்குதலை மேற்கொண்டனர்.

கொல்லப்பட்ட இராணுவத்தினரிடம் இருந்த ஜே.ஆர். ரக கைக்குண்டை புலிகள் கைப்பற்றினர்,

(இ-3)

### சுண்டிக்குளி ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சோகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ. யு. ஜயசூரியா, எச். டி. சித்தக ஆகியோர் தலா 371 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தையும்—

றோயல் கல்லூரியைச் சேர்ந்த எச். டி. எஸ். சுமணரத்னா 366 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும் வகிக்கின்றனர்.

மருத்துவம் உயிரியல் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் அகில இலங்கை ரீதியில் ஆகக் கூடுதலான 342 புள்ளிகளை கொழும்பு றோயல் கல்லூரியைச் சேர்ந்த டி. யு. பி. எஸ் ஜெயக்கொடி பெற்றுள்ளார்.

இரண்டாவதாக மிகக் கூடுதல் புள்ளிகளை அதே கல்லூரியைச் சேர்ந்த பி. ஏ. கே. ஜி. குணரத்னா, எஸ். எம். ஜயரட்ன ஆகியோர் பெற்றுள்ளனர். இவர்கள் பெற்ற புள்ளிகள் 333 ஆகும்.

றோயல் கல்லூரியைச் சேர்ந்த கே. ஏ. முத்துமாலா 332 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தை அடைந்தார். (இ-எ)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 07-04-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org